ஓம் சாயி ராம்

சாயி மார்க்கம்

இலங்கை ஸ்ரீ சத்ய சாயி நிலையங்களின்
காலாண்டு இதழ்

நிலையம் Sathya Sai Centre
ராந்த பஜனை
மாலை4, 00

சாயி மார்க்கம்

SAI MARGAM (*Tamil*)

மலர் 5
இதழ் 13

ஒரே ஒரு மதம்
அது அன்பு எனும் மதம்

சாயி சாந்தி ஆண்டு
ஜூலை – செப்ரெம்பர்
ஒக்ரோபர் – டிசம்பர் 1998

பொருளடக்கம்

நவம்பர் 23 — 01
நல்ல மனிதன் யார் ? — 03
' ஓம் ஸ்ரீ சாயிராம் ' வாழைப்பழத்தில் — 07
கடவுளைக் காண்பது எப்படி ? — 09
சாயி சேவையில் — 11
எமது பகவான் பாபா பற்றி — 13
உலகில் அமைதி உண்டாகட்டும்
அது தனி ஒருத்தரிடம் ஆரம்பமாகட்டும் — 14
இருபது வயதில் பாபா எழுதிய கடிதம் — 19
குரு பூர்ணிமா — 22
செய்திகள் வவுனியாவில் சாந்தம் மந்திர் — 25
மலை நாட்டில் மனிதமேம்பாட்டு விழிப்புணர்வுக் கண்காட்சி — 27
நயினாதீவு ஸ்ரீ சத்தியசாயி நிலையம் ஆரம்பவிழா. — 28

இலங்கையில் தனிப்பிரதி :- ரூபா 25/-
வருடசந்தா (4 பிரதிகள் தபால் செலவு உட்பட) ரூபா 100/-
வெளிநாடு வருடசந்தா US $ 10
காசோலை, பணக்கட்டளைகளை ஆசிரியருக்கு அனுப்பி வைக்கவும்.

ஆசிரியர்:
பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம்
(நந்தி)
நிருவாக அலுவலகம்;

துணை ஆசிரியர்கள்:
ஸ்ரீ S, R. சரவணபவன்
ஸ்ரீ V. K. சபாரத்தினம்

' சத்தியம் '
681/2 பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

ஓம் ஸ்ரீ சாயிராம்

நவம்பர் 23

எப்படி டிசம்பர் 25 சமயங்களின் சரித்திரத்தில் இடம் பெற்று விட்டதோ, அவ்வண்ணமே நவம்பர் 23 ஆம் திகதியும் ஆத்மிகத்திற்கு நிலையான நினைவு நாள் ஆகும்.

டிசம்பர் 25 - யேசு பகவான் பிறந்தார். மாட்டுத் தொழுவத்தில், ஏழைப் பெற்றோர், கல்வி அறிவில் குறைந்த மக்கள் வாழ்ந்த காலம், விஞ்ஞானம் தவழ்ந்தது, நல்லவர்கள் இருந்தார்கள், மிகக் கொடியவர் களும் வாழ்ந்தார்கள், யேசு அவர் களுக்கு போதனை செய்தார், மன்னித்தார். அவரது சீடர்களும், அவரைப் பின்பற்றியவர்களும் கிறிஸ் தவ சமயத்தை வளர்த்தார்கள்.

நவம்பர் 23 - சாயி பகவான் பிறந்தார். புட்டபர்த்தி பாம்புகள் புற்றுகள் எடுக்கும் ஊர். பிள்ளை யின் படுக்கையில் பாம்பு ஒன்று. ஏழைப் பெற்றோர். விஞ்ஞானம் வாலிபத்தின் மிடுக்கு நிலையில். இப்போது கணனி காலம். நல்லவர் கள் உண்டு. மிகக் கொடியவர்களும் வாழ்கிறார்கள். அவதாரத்தின் வருகை தேவைப்பட்டது. சாயி, அன்பு என்ற வார்த்தைக்கு விரிவான, ஆழமான, அழுத்தமான அர்த்தம் தருகிறார். அன்பின் கருவில் தான் சத்தியம், தர்மம், சாந்தி, அகிம்சை உருவாகின்றன என்று விளக்கியிருக் கிறார்.

சாயி அடியார்கள் எல்லா மதங் களையும் 'சார்ந்தவர்கள். சாயி அடியார்கள் ஒரு புதிய மதத்தை உண்டாக்கவில்லை. சாயியின் போத னைகள் எல்லா மதத்தினரையும் தமது மதங்களின் அடிப்படையில் வாழ வழிவகுக்கின்றன. இது 21 ஆம் நூற்றாண்டிற்குத் தேவையான ஆத் மிக இணைப்பு. ஆகவே சாயி பகவா னைப் பற்றி, அவரைத் தெரியாத வர்களுக்கு அறிமுகம் செய்வது சாயி அடியார்களின் கடமையாகும்.

அதற்கு முன், 1975 இல் தனது பிறந்தநாள் அன்று, பகவான் கூறிய ஓர் அறிவு மொழியைப் பார்ப்போம்:

'நான் கலண்டரில் ஒரு குறிப் பிட்ட தினத்தை எனது பிறந்த நாளாக விளிப்பதில்லை; ஏனெனில் உங்கள் இதயத்திலே என்று எனது தெய்விகம் மலர்கிறதோ அன்றுதான் உங்களுக்கு எனது பிறந்தநாள். ஆகவே நீங்கள் எனது பிறந்த நாளைத் தனித்தனியாகத்தான்

கொண்டாட வேண்டும். எப்போது எனது அறிவுரைகளைச் செயலாற் றவும், எனது ஆணைகளைப் பின் பற்றவும், எனது செய்தியைச் சேவை யாக்கவும், சாதனையில் ஈடுபடவும் தீர்மானிக்கிறீர்களோ அந்த நாளே உங்களுக்கு எனது பிறந்தநாள்'

Sathya Sai Speaks Vol X (1980) Page 41

பகவானின் அடியார்களாகிய நாம் எத்தனையோ தடவைகளில் பகவானின் ஆணைகளைப் பின்பற்ற மூயன்றிருக்கிறோம். நமது நிலைய பஜனைகளின் பின்போ, சாயி நிலை யத்தில் நடைபெறும் பல விதமான வீழாக்கள் சொற்பொழிவுகளின் பின்போ, ஏன், புட்டபர்த்தி சென்று பாபாவின் தரிசனம் களித்த பின்போ அவரின் ஆணைகளைப் பின்பற்ற மனம் கொண்டு செயல்பட்டிருக் கிறோம். ஆனால், சில நாட்களில் அதை மறந்து பழைய நிலைக்கு வந்து விடுகிறோம். நாளாந்த வாழ்வில் நம்மைச் சுற்றிய உலகில் உள்ள போட்டியும், பேராசையும், சுயநல மும், நம்பிக்கை நலிவும் எம்மை சீர்குலைய வைக்கின்றது.

ஆனால் பகவானின் அன்பின் மகத்துவத்தைப் பூரணமாக புரிந்து கொண்டால், அவர் ஆணையின் அர்த்தத்தை விளங்கிக்கொண்டால், அவர் பாதத்தின் பாதுகாப்பில் சரணாகதி அடைந்தால், நாம் வைராக்கியத்துடன் என்றும் எமது வாழ்வை பகவானின் போதனையின் உருவம் ஆக்கமுடியும். பகவான் வேண்டுவதும் அதுதான்.

நவம்பர் மாதம் எமக்கு இன்னும் ஒரு சந்தர்ப்பம் தருகிறது.

BE DO. SEE. TELL

ஜெய் சாயிராம்
ஆசிரியர்.

சாயி மார்க்கம் அன்பர்களுக்கு

இந்த இதழ் செப்டெம்பர் மாதம் வந்திருக்க வேண்டியது. வராததற்கு மன்னிக்கவும். நவம்பர் மாதத்தில் வருவதால், இதனை இரண்டு காலாண்டுகளை அடக்கியதாக கருதுகிறோம். அதாவது ஜூலை - செப்டம்பர்; ஒக்டோபர் - டிசம்பர். எனினும் சந்தாதாரருக்கும் மற்றோருக்கும் ஒரு இதழாகவே கருதப்படும். மலர் 5 இதழ் 14 தொடர்ந்து உரிய நேரத்தில் மலரும்.

ஓம் ஸ்ரீ சாயிராம்

நல்ல மனிதன் யார் ?

— மத்திய இணைப்பாளர் ஸ்ரீ S. சிவஞானம் —

(சொற்பொழிவு)

சாயி பக்தர்களான எல்லா ஆண்களையும், பெண்களையும் நல்லவர்கள் என்று சொல்லலாம்.

நல்லவர்களான எல்லா ஆண்களையும், பெண்களையும் சாயி பக்தர்கள் என்றும் சொல்லலாம்.

முன்னைய கூற்று எப்போதும் பொருந்தாது. பின்னையது எப்போதும் சரியாகும்.

இன்று எனது உரையின் பொருளாகத் தோனிக்கவுள்ளது. ஓரளவுக்கு இக்கருத்தேயாகும். நற்குணம் வாய்ந்த மனிதர்கள் அனைவரும் சாயி பக்தர்கள் என்ற கருத்தைச் சின்ன விஷயமாக எண்ணி அலட்சியம் செய்து விடவேண்டாம். இன்னும் கூறுகிறேன்.

நல்லவராயிருப்பவர்கள் நல்ல பௌத்தர்களாயிருப்பார்கள்.

நல்லவராயிருப்பவர்கள் நல்ல இந்துக்களாயிருப்பார்கள்.

நல்லவராயிருப்பவர்கள் நல்ல முஸ்லிம்களாயிருப்பார்கள்.

நல்லவராயிருப்பவர்கள் நல்ல கிறிஸ்தவராயிருப்பார்கள்.

நல்ல மனிதன் என்பதன் பொருள் என்ன ? இச்சபையிலுள்ள ஒவ்வொருவரையும் பார்த்து ஒரு மனிதனை நல்லவனாக்கும் குணாம்சம் ஒன்றைக் கூறும் என்று கேட்டால், நிச்சயம் அதிசிறந்த பதில்கள் உனக்கில் கிடைக்கும். எப்பேற்பட்ட பதில்கள் அவை ?

நல்ல மனிதன் நேர்மையானவன் இரக்க சிந்தை உள்ளவன், குடும்பத்துக்கு அவன் நல்ல தந்தை, நல்ல கணவன், நல்ல மைந்தன், நல்ல அன்னை, நல்ல புதல்வி, நல்ல மனைவி, பிறர் கருத்தை மதிப்பவன், கருணையுள்ளவன், நியாயமான வியாபாரி, சிறந்த அதிகாரி, விசுவாசமுள்ள பணியாள், தன்னலம் பற்றற்றவன், தர்ம சிந்தையுடையவன், பணப் பித்தில்லாதவன் இப்படி நீட்டிக் கொண்டே போகலாம். நல்ல மனிதன் யார் என்பதற்கு விடை உங்களுக்குத் தெரியும்.

சுவாமி சொல்கிறார்

நீங்கள் கூறும் மேற்படிவிடைகளின் உட்கிடக்கையை ஆராய்வீர்களானால் சில அடிப்படை உண்மைகளைக் கண்டுகொள்வீர்கள். அவற்றில் ஒன்று தூய்மை, எண்ணம், சொல், செயலில் ஒருமைப்பாடு. ஒரு பூரண பக்தனுக்குத் தேவையான 25

குணவிசேஷங்களும் பின்வரும் இரண்டிலும் செறிந்துள்ளன என்று சுவாமி சொல்கிறார். ஒன்று: பற்று நீக்குதல் (வைராக்கியம்). அடுத்தது மனோ வாக்கு காயத்தினால் இடைவிடாது இயற்றும் தவம். இடைவிடாத பயிற்சி என்பது எங்கள் பழக்க வழக்கங்களை நித்தமும் சீர்திருத்திப் பூரணப்படுத்துவதாகும். நல்லதை நினை, நல்லதைப் பேசு, நல்லதைச் செய், நல்லதைப் பார், நல்லதைக் கேள், - சுவாமி எங்களுக்குத் தந்த ஐவகை மார்க்க நெறி இவை. புத்த பிரான் இன்னும்மூன்றைச் சேர்த்து அட்ட சீலங்களை உருவாக்கினார்.

மானிடப் பிறப்பின் பெறற்கரிய சிறப்பு ஒன்று என்னவென்றால் தன்னை உயர் நிலைக்கு மாற்றக் கூடிய ஆற்றலும், வல்லமையும் படைத்திருப்பதாகும் நீங்கள் இந்த சபையிலே வந்து ஒன்றுகூடி இருப்பதானது உங்களை மேம்படுத்த வேண்டும் என்ற உங்களின் உயர் எண்ணத்தையும், உறுதியையும் காட்டுகின்றதல்லவா ?

ஓ பகவான் !

எங்களில் சிலர் நல்லவர்களாயிருந்தார்கள்; அவர்களை இன்னும் சிறந்தவர்களாக்கினீர்கள்.

சிலர் அவ்வளவு நல்லவர்களாயில்லை; அவர்களை நல்லவர்களாக்கினீர்கள்.

சிலரிடம் ஓரளவு தீமை இருந்தது; அவர்களை ஓரளவு நல்லவர்களாக்கினீர்கள்.

சிலர் தீயவர்களாயிருந்தார்கள்; இன்னும் மோசமாகாமல் அவர்களைக் காத்தீர்கள்.

சிலர் அறவே கெட்டுப்போயிருந்தார்கள்; அதை அவர்கள் உணரும்படி செய்தீர்கள்.

இவ்விதமாக ஆசிகள் புரிந்து அருள் செய்த உங்களின் பாதக் கமலங்களில் வீழ்ந்து வணங்குகின்றோம்.

நல்லவராக, பயன்தரும் நல் வாழ்க்கையை வாழ விரும்புபவருக்கு வாழ்வின் குறிக்கோள் குறித்து ஒரு தெளிவு வேண்டும். 1980 ம் ஆண்டு, செப்தம்பர் மாதம், 30 ம் தேதி பக்தர் ஒருவருக்குப் பகவான் எழுதிய கடிதத்தின் ஒரு சிறு பகுதியை வாசிக்கின்றேன்:

"தீர்ப்பு கூறும் சமயம், பெற்ற பட்டங்கள், பறை சாற்றும் கொள்கைகள் இவற்றைப் பார்த்து நாங்கள் மதிப்பிடப்படுவதில்லை. எங்களுடைய உழைப்பு, ஊக்கம், தியாகம், நேர்மை, குணசீலம் இவற்றைக் கொண்டே மதிப்பிடப் படுகின்றோம். உள்ளுறையும் தெய்வீகத்தை உணர்ந்துகொள். ஆசைகள் எல்லாம் நிறைவு பெறும். உன் துன்பங்கள், துயரங்கள் எல்லாம் முடிவுக்கு வரும்."

சாதனை என்கின்ற ஆன்மீகப் பயிற்சியின் ஒரே நோக்கம் எண்ணத்தைத் தூய்மைப் படுத்துவதும், இதயதைத் தூய்மைப்படுத்துவதுமாகும என்கின்றார் பகவான.

என்ன கூடையிலே? என்ன நெஞ்சிலே?

யாழ்ப்பாணத்திலுள்ள சில சாயி நிலையங்களில சென்ற மாதம பஜனைகுப பின உரை நிகழ்த்தினன. அந்த உரையமேல இரணடொரு தடவை ஒரு கதையை விவரித்தேன் இராணுவச் சோதனைச் சாவடிகளில அனுபவப்பட்ட அம்மக்களுக்குக கதை எடுத்த எடுப்பிலேயே புரிந்து கொள்ளக கூடியதாக இருந்தது.

பூமலாக வாழ்க்கையை முடித்துக் கொணட ஒருத்தன சொர்க்க வாசலடியில வந்து நினறான. தலையில பாரம நிறைந்த பெரியதொரு கூடை இருந்தது. பாதுகாப்புக் கடமையில நின்ற சேவகன இவனைப் பார்த்தான்

"என்ன கூடையிலே?"

அந்தப் பேதை மனிதன் பூவுலகில் தான் சாதித்தனவற்றையெல்லாம் பட்டியலாக எடுத்துச் சொன்னான். அவற்றுக்கு ஆதாரமான ஆவணங்கள் தான் கூடையில் இருப்பவை என்றான்.

சமாதான நீதவான் பதவி, படித்துப் பெற்ற பட்டங்கள்; பெருவாரியான சொத்துக்குரிய உறுதிப் பத்திரங்கள்; செய்த தான தருமங்கள் பற்றியும், கிடைத்த பாராட்டு விழாக்கள் பற்றியும் பத்திரிகைகளில் வெளியான செய்திக் கத்தரிப்புகள்; கோயில் கட்டட நிதிக்கு உதவியது, சேவா நிலையத் தலைவர் நியமனம், ஏன் மத்திய இணைப்பாளர் நியமனம் கூடத்தான் ... ...

சேவகன் சொன்னான்: "இந்தாய்யா, கூடையை இறக்கு. கழிவுகள் வீசுகிற அந்தக் குப்பைக் குழியிலே அதைப்போடு" சொர்க்கத்துக்குப் போக வந்தவன் சேவகன் சொன்னபடி செய்தான்.

"நீ கூடையிலே கொண்டாந்தியே, அதற்கெல்லாம் இந்த வாசலுக்கு உள்ளே ஒரு வேலையும் இல்லே, தெரியுமா? உடல் சோதனை இருக்கு. அந்த வாசலுக்குப் போ உன் நெஞ்சைத் திறந்து காட்டு."

அவன் அடுத்த வாசலுக்குப் போனான். அங்கே நெஞ்சைச் சோதித்த சேவகன் உறுத்துப் பார்த்தான். தலையைப் பலமாக ஆட்டினான். "இந்தமுறை சரிவராது. திரும்பிப் போ. அடுத்த முறை வா" என்றான்.

அந்த மனிதனின் இதயத்திலே எத்தனையோ அழுக்கின் கறைகள் இருந்தன. அடுத்த முறை என்பது என்ன? மறுபிறவி அல்லவா? அறுபதோ, எழுபதோ வருடங்களின் பின்பல்லவா?

ஆகவே நாம் ஏதாவது தப்புச் செய்ய நேரிட்டால் ''உடற் பரிசோதனை'' என்ற இந்த மந்திரத்தை நினைவு கூருவோமாக. ''உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது'' மட்டக்களப்பைச் சேர்ந்த அறிஞர் பெருமானான விபுலானந்த அடிகளின் கூற்று இது.

நான் நல்லவனாவேனா?

வேதமோ உபநிஷதமோ எனக்குத் தெரியாது. வேதாகம நூலோ, புனித குரானோ தெரியாது. தம்ம பதத்தை அறியேன். தேவாரமும் தெரியாது - நான் நல்லவனாவேனா? ஆம்!

நீங்களும் 'ஆம்' என்று சொல்ல வேண்டும் **எண்ணம் சொல், செயலில் தூய்மையே நற்குணத்தின் சாரமாகும்.**

மே மாதம் 9ஆம் தேதியன்று நிகழ்ந்த பகவானின் குரு பூர்மணிமா அருளுரையில் அடங்கியிருந்த ஆழ் குறிப்புப் பற்றி இந்துலால் ஷா அவர்கள் விளக்கிக் கூறியுள்ளார். சுவாமி எங்களைப் படிப்படியாக உருவம் இல்லாத இறைதத்துவத்தை நோக்கி அழைத்து வந்துள்ளார் என்றார். சுவாமி தன்னை அடையாளம் காட்டிய 1940 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு படியாக எம்மைப் பக்குவப்படுத்தி இந்த நிலைக்கு இட்டு வந்திருக்கிறார் என்றும் எந்தவொரு சமயக் கோட்பாட்டையும் அவர் எடுத்து விளக்கவில்லை என்றும் கூறினார்.

ஸ்ரீ இந்துலால் ஷா அவர்கள் உருவமற்று எங்கும் நிறைந்துள்ள பாபாவின் இறை தத்துவத்தையே நாம் இனிமேல் உணரப் பழக வேண்டும் என்றார். 1996ம் ஆண்டு ஜூன் மாதம் 30ம் திகதி பாபா நிகழ்த்திய அருளுரை ஒலி நாடாவைக் கேட்டுப் பார்க்கும்படி அறிவுறுத்தினார். அதிலே பேரறிவு சொரூபமே தான் என்றும் நாங்களும் அவ்வண்ணம் பேரறிவுதான் என்றும் பாபா அறிவித்துள்ளதாகக் கூறினார்.

தெய்வீகப் பேரறிவு

1926ம் ஆண்டு நவம்பர் மாதம் 24ம் திகதி அதிகாலையில் பாண்டிச்சேரியிலுள்ள தமது ஆச்சிரமத்தில் ஸ்ரீ அரவிந்தர் ''**தெய்வீகப் பேரறிவு உலகின் மீது இறங்கியுள்ளது**'' என்று அறிவித்தார் அவர் குறிப்பிட்டது முதல் நாள் நிகழ்ந்த பகவான் பாபாவின் வருகையையேயாகும் என்றார் ஸ்ரீ இந்துலால் ஷா அவர்கள்.

சூஃபி கவிஞர் ஒருவரின் வாக்கை மேற்கோள் காட்டி இவ்வுரையை முடிக்கின்றேன். அவர் கூற்று நம் பிக்கையூட்டுகின்றது.

''கல்லாக மடிந்த நான் புல்லாகப் பிறந்தேன். புல்லாய் மடிந்த நான் வல்விலங்காய்ப் பிறந்தேன்.

விலங்காய் மடிந்த நான் மனிதனாகப் பிறந்தேன். மனிதனாய் மடியும் நான் என்னவாவேன்?''

மனிதராக மடியும் நாம் தேவராவோமா?

ஜெய் சாயிராம்

(கொழும்பு பார்ன்ஸ் பிளேஸ் ஸ்ரீ சத்திய சாயி மந்திரில் 31-07-98 இல் மாலை பஜனையின்பின் நிகழ்ந்த உரையின் சுருக்கம்.)

தமிழாக்கம்: **ஸ்ரீ வே.க. சபாரத்தினம்**

புட்டபர்த்தியில் இருந்து மயக்க மருந்தியல் நிபுணர்
வைத்திய கலாநிதி சரா பவான் எழுதியது

'ஓம் ஸ்ரீ சாயி ராம்' வாழைப்பழத்தில்

உத்தியோகத்தர் சிற்றுண்டிச் சாலையில் மதிய போசனத்திற்காக நேரம் எடுத்தால், சத்திர சிகிச்சை கால அட்டவணையில் ஏற்படக் கூடிய அனாவசிய தாமதத்தைத் தவிர்ப்பதற்கு, நான் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரும் சிறு பையில் சொற்ப உணவை எடுத்து வருவேன். நோயாளியை கண்காணிக்கத் தகுதியான ஒருவர் இருப்பின், பக்கத்து அறைக்கு நழுவி உணவு உண்பேன். நேரத்திற்குச் சாப்பிடவும், சத்திர சிகிச்சை நடக்கும் இடத்தில் நோயாளிகளைப் பராமரிக்கவும், சத்திர சிகிச்சைகளின் கால இடைவெளிகளைக் குறைப்பதற்கும் இந்த முறை வசதியாக இருந்ததால், அதை விரும்பினேன்.

தசரா விழாவுக்கான யாகம் 25 செப்றெம்பர் 1998, காலை ஆரம்பமானது. அன்று பழத்த மஞ்சள் நிற வாழைப்பழம் ஒன்றை கடதாசியால் சுற்றி எனது உணவுடன் பையில் வைத்திருந்தேன். இந்தப் பை (Brief case) எப்போதும் பூட்டப்பட்டு இருக்கும். அதை யாரும் எடுக்க முடியாது. சாப்பாட்டு நேரம் அந்த வாழைப் பழத்தை கடதாசியிலிருந்து எடுத்த போது, அதன் தோலில் சில எழுத்துக்களைப் பார்த்ததும் வாயடைத்து மௌனமானேன். அந்த எழுத்துக்கள் எனக்கு அந்நியமாயிருந்ததால் ஒரு நேர்சை வாசிக்கச் சொன்னேன். வாழைப்பழத்தின் மெல்லிய பொன் மஞ்சள் தோலில் தெலுங்கு எழுத்துக்களில் 'ஓம் ஸ்ரீ சாயி ராம்' எழுதப்பட்டிருந்தது. அந்த அற்புதமான எழுத்துக்களைப் புகைப்படம் எடுத்தபின், அந்தப் பழத்தை பிரசாதமாக பக்தர்களுடன் சேர்ந்து அருந்தினேன்.

புலனாகாத ஒரு கைதான் இதை எழுதியது. அது எங்கும் வியாபகமாகவும், எல்லாம் வல்லவராகவும் இருக்கும் அன்பு நிறைந்த பகவான் பாபாவுடையது என்பது எனது தீர்ப்பு. அவரின் அன்பு நிறைந்த கருணைச் செயல் ஒரு புறம் இருக்க, 'ஓம் ஸ்ரீ சாயி ராம்' என்ற மந்திரத்தை ஓதுமாறு எனக்கு ஒரு செய்தியைத் தருகிறாரா என்று ஆச்சரியப்படுகிறேன்.

மறுநாள் காலையில், சுவாமிக்கு ஒரு கடிதம் எழுதினேன். அன்றைய முதல் தரிசனத்திலேயே அதை வாங்கினார். கடிதத்தின் சில வசனங்கள் பின்வருமாறு:

''மயக்க மருந்து கொடுக்கும் எனது தொழிலின் போது ஒவ்வொரு நிலையிலும் தங்கள் வருகையையும், கண்காணா உதவியையும் கடந்த பல வருடங்களாக உணர்ந்தேன். இப்போது இந்த அதி நிபுணத்துவ ஆஸ்பத்திரியில் கூடுதலாக அநுபவிக்கிறேன். சுவாமி! என்னைத் தங்கள் கருவியாக்கி, நோயாளிகளுக்கு உதவியதற்காக எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

... நேற்று, 25 வெள்ளிக்கிழமை எனது உணவுடன் ஒரு வாழைப் பழத்தை எனது பையில் எடுத்துச் சென்றேன். வாழைப்பழத்தை எடுத்தபோது, என்ன அதிசயம், தோலிலே எழுத்துக்கள் கண்டேன். தெலுங்கு மொழியில் அவை இருந்ததால நேர்சை வாசிக்கச் சொன்னேன். ''ஓம் ஸ்ரீ சாயிராம்' என்று இருந்தது. சுவாமி, எத்தகைய கருணை இது! நான் இந்தக் கடிதத்தை எழுதும் போதே, அதன் உள்ளடக்கம் தங்களுக்குத் தெரியும். தரிசனத்தின் போது இந்தக் கடிதத்தை தாங்கள் எடுத்ததால, வாழைப்பழத்தில் இருந்த 'ஓம் ஸ்ரீ சாயிராம்' என்ற எழுத்துகள் உங்கள் அற்புதமான செயல் என்பதை உறுதிப்படுத்துவதாக நான் அனுமானிப்பேன்.''

வைத்திய கலாநிதி சராபவன் (சரவணபவன்) இலங்கையில் பிறந்தவர், கல்வி கற்றவர், ஆஸ்திரெலிய பிரசையானார். இப்போது புட்டபர்த்தியில் பகவானின் அதிநுட்ப ஆஸ்பத்திரியில் மயக்க மருந்தியல் நிபுணராக பணி புரிகின்றார்.

— ஆசிரியர்

படம் கவர் பிற்பக்கத்தில் காண்க

கடவுளைக் காண்பது எப்படி?

— ஷீர்டி சாயிபாபா

மனம் முரட்டுத்தனமானது, கட்டுக் கடங்காதது, அதை அடக்க முயல வேண்டும். ஒரு ஈயானது எப்படி எல்லாப் பொருள்கள் மீதும் உட்கார்ந்துவிட்டு தீயை அணுகும் போது பறந்துவிடுகிறதோ, அதைப் போன்று மனமானது இந்திரிய சுகங் களை நாடி அவற்றை அனுபவித்து, அவற்றுள் மூழ்கி, தெய்வீகத்தைக் காணும்போது வேறுபக்கம் திரும்பி விடுகிறது. கட்டுக்கடங்காத இந்த மனம் கடவுளிடம் ஒன்று படாத வரை யில், சம்சாரம், பிறவிப் பெருங்கடல் தவிர்க்க முடியாததே, மனதை ஜெயிக்காத வரையில் மீண்டும் பிறந் தேயாக வேண்டும். ஆனால் பிறவி களிலே, மானிடப் பிறவியே மிகச் சிறந்தது.

ஆகவே, மூர்த்தி பூஜை செய். அதாவது கடவுளை உருவங்களில் வழிபட்டு. மனதை ஒரு நிலைப் படுத்து, சிலையும் கடவுளே, உருவ வழிபாட்டைப் புறக்கணிக்காதே, ஒரு உருவச்சிலை ஆழ்ந்த பக்தியுடன் பூஜிக்கப்படும் பொழுது, மனது லயத் தைப் பெறுகிறது.

பின்னர் மனனம் (அதாவது) கடவுளின் லீலைகளை எண்ணுவது, தியானம் இவற்றைக் கடைப்பிடி. புராணங்கள், சாத்திரங்கள் ஆகிய வற்றைப் பாராயணம் செய். அவற் றுள் கூறியிருப்பதைக் கடைப்பிடி. ஆத்ம வித்யை எல்லா ஞானத்திலும் சாலச்சிறந்தது. அதில் தேர்ந்து விட்டால் முக்தி கிடைத்து விடுகிறது; ஹரி (கடவுளே) நம் வசப்பட்டு விடுகிறார். இந்த ஞானத்தையும், மோக்ஷத்தையும் பெறுவதற்கான நான்கு வழிகளைக் கூறுகிறேன்.

அவையாவன :

1. நித்யானித்ய விவேகம் - எது அழியக்கூடியது, எது சாச்வத மானது என்றறிதல்.

2. வைராக்யம்.

3. சமா - மனதை அமைதிப்படுத் துவது,

4. முமுக்ஷீத்வம் - முக்தியடைய ஆசை

இவற்றைக் கடைப்பிடி, உன்னை கடவுளுக்கே அர்ப்பணம் செய். அது தான் ஆத்ம நிவேதனம்.

தினமும் சித்தர்கள், சாதுக்கள் ஆகியோரை தரிசனம் செய். தூய வாழ்க்கை நடத்து. இங்ஙனம் இறக்கும் போது தூய்மையாக

இருக்கக்கூடும், இறக்குந் தருணத்தில் எந்த ஆசையும் இருக்கக்கூடாது. உன்னுடைய இஷ்ட தெய்வத்தின்மீது மனதைச் செலுத்து. மனதை ஈசனிடம் ஒருமைப்படுத்தியிருக்கும்போது, சாவு வருமானால் முக்தி நிச்சயம்.

(இளைஞர்கள் இப்போது சாயி இலக்கியங்களை நன்கு கற்கிறார்கள். நல்லூர் **மணிவண்ணன்** மனம் கவரும் சிலவற்றை குறிப்பெடுத்து பாதுகாக்கின்றார்.

1987 ஏப்பிரலில் வெளிவந்த "**தர்மச் சுடர்**" என்ற சஞ்சிகையில் வெளியான கட்டுரை ஒன்றையும் அவர் குறிப்பெடுத்து வைத்துள்ளார். அவர் குறிப்பெடுத்த புத்தகத்திலிருந்தது இக்கட்டுரை.)

— ஆசிரியர்

'அந்தக் காலம் போய் விட்டது'

கொழும்பு ஸ்ரீ சத்திய சாயி நிலைய தலைவர்
Dr V. ஜெகநாதன் அவர்கள்

பகவானின் பிறந்த நாள் அன்று இராமகிருஷ்ண மிஷனில் கூறியவை;

"ஒரு காலத்தில் பகவான் பாபாவின் படத்தை *Purse*க்குள்ளும் பொக்கொற்றுக்குள்ளும் ஒளித்து வைத்து அவ்வப் போது கும்பிட்டோம். மற்றவர்கள் பார்த்தால் எம்மை கேலி செய்வார்கள், பழிப்பார்கள் *Riddle* செய்வார்கள் என்று நினைத்தோம். **அந்தக் காலம் போய்விட்டது** இப்போது உலகலாவிய ரீதியில் பாபாவை தெய்வமென கும்பிடுகிறார்கள் அவர் படங்களையும் கும்பிடுகிறார்கள்."

சாயி சேவையில் ...

நமது அரசாங்க பாடசாலைகளில் முதலாம் ஆண்டு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகளில் ஐந்து சத்திய சாயி மனித மேம்பாடுகளை விளக்குகிறோம். அவர்கள் கற்பிக்கும் பாடப் புத்தகங் களில் உள்ள பாடங்கள் மூலம் எங்ஙனம் மேம்பாடுகளை உணர்த்த முடியும் என்று காட்டுகிறோம். அதற்கு ஒவ்வொரு மேம்பாடுகளில் உள்ள உபமேம்பாடுகளை இனம் காண்கிறோம். சுருக்கமாக சிலவற்றை இங்கே தருகின்றோம்.

மனித மேம்பாடுகள் சக உப - மேம்பாடுகள்

1	**சத்தியம்**	உண்மை	அறிவு தாகம்	ஞானம்
		ஆய்வு மனம்	திடசித்தம்	தன்னை அறிதல்
		சமநிலை	பகுத்தறிதல்	நேரான சிந்தனை
		புரிந்துணர்வு	நல்லவைகாணல்	மதங்களை மதித்தல்
		நல்லவை சிந்தித்தல்		

2	**தர்மம்**	நன்னடத்தை	தன்னடக்கம்	குழுவாக செயல்படல்
		நேரஒழுங்கு	தன்னம்பிக்கை	நல்லோர்சேர்க்கை
		நேரம்தவறாமை	இனிய பேச்சு	நன்றியுணர்வு
		சுத்தம்	ஊக்கம்	கௌரவம்முயற்சி
		சுகாதார வாழ்க்கை	விசுவாசம்	தலைமைத்துவம்
		கீழ்ப்படிவு	சமயோசிதபுத்தி	சுய உதவி
		எளிமையானவாழ்வு	துணிவு	உதவி செய்தல்
		நேர்மை	சமத்துவம்	தொழிலுக்கு மதிப்பு
		விவேகம்	தியாகம்	பெற்றோரைமதித்தல்
		இசைவாக்கம்	பூரணத்துவம்	ஆசிரியரை கனம்பண்ணல்
		பயபக்தி	நீதி	முதியோரை மதித்தல்.
		சத்தியம் காப்போம்		

3 சாந்தி

அமைதி	தூய்மை	ஒருமைப்பாடு
அடக்கம்	பொறுமை	தியானம்
ஒழுக்கம்	நேர்மை	சமாதானம்
சாந்தம்	தன்னடக்கம்	மனத்திருப்தி
ஒத்திசைவு	தன்மானம்	சகிப்புத்தன்மை
பொறுப்பு	பாவங்களைத்தவிர்தல்	
திருப்தி	ஞாபக சக்தி	

4 அன்பு (பிரேமை)

நேர்மை	தயை	அநுதாபம்
நாணயம்	கருணை	மனிதநேயம்
பரிவு	சகிப்புத்தன்மை	சுயநலமின்மை
சிநேகிதம்	இயற்கைமேல் பரிவு	மன்னிப்பு
இரக்கம்	மிருகங்கள்மேல்பரிவு	பகிர்தல்
பக்தி	தாய்நாட்டுப் பற்று	உதவி

5 அகிம்சை இது இருவகைப்பட்டது.

1 உளவியல் பாங்குள்ளது.
2 சமூகப் பாங்குள்ளது

உளவியல் பாங்கு

பிரிவு	துன்பம் செய்யாமை	உதவி செய்தல்	
பிரியம்	ஒத்துழைப்பு	சமுக சேவை	
இரக்கம்	பிறரிடம் அக்கறை	பற்றற்ற நிலை	
மரியாதை	பிரபஞ்ச பிரேமை	பண்பு	
கருணை	பிறர்நலம் கருதுதல்	சகோதரத்துவம்	

உணவு / பணம் / சக்தி / நேரம் வீண்விரயம் செய்யாமை
எந்நிலையிலும் நடுநிலைமை

சமூகப்பாங்கு

தேசிய ஒற்றுமை பிறர் கலாச் சாரத்தை, சமயத்தை, மொழியை மதித்தல், தீண்டாமை விலக்குதல், சமூக, தேசிய உடமைகளில் மகிப்பு.

சூழல் தூய்மை எல்லா உயிர்களிடமும் (மிருகம், தாவரம்) அன்பும் பரிவும் சமூகநீதி, ஜனநாயக உணர்வு

எமது பகவான் பாபா பற்றி ...

பிள்ளைப் பெயர்	:	சத்திய நாராயணா
தகப்பன்	:	ஸ்ரீ பெத்த வெங்கப்ப ராஜு
தாய்	:	ஸ்ரீமதி ஈஸ்வரம்மா
அக்காமார்	:	வெங்கம்மா, பர்வதம்மா
அண்ணா	:	ஸ்ரீ சேஷய ராஜு (ஆசிரியர்)
தம்பி	:	ஒருவர்
பிறந்த நாள்	:	23 - 11 - 1926, திங்கள் கார்த்திகைச் சோமவாரம்
சிறுவயதில் அன்பு பாராட்டிய மூதாட்டி	:	சுப்பம்மா
பாட்டனார்	:	கொண்டம ராஜு
சிறுவயதில் அவரை மதிப்புடன் அழைத்த பெயர்கள்	:	குரு, பிரம்மஞானி
தாய் மொழி	:	தெலுங்கு (தமிழுடன் சேர்ந்த —திராவிட மொழிகளில் ஒன்று)
பத்து வயதில் ஏற்படுத்திய பஜனைக்குழு	:	பண்டரி பஜனைக்குழு
முதல் நாடகத்தின் பெயர்:		செப்பினது செஸ்தாரா ? (சொன்னபடி செய்கிறீர்களா?)
முதல் பஜனை பாடல்	:	மானச (**B**) பஜரே குருசரணம் துஸ்தர (**B**) பவ சாகர தரணம்.
பஜனை வைக்க வேண்டிய நாள்	:	வியாழக்கிழமை
சிறுவயதிலே	:	கவிஞன், நாடக ஆசிரியர், பாடகர், சாரணர், நடனம் ஆடுபவர், விளையாட்டு வீரர், நடிகர்.
அவதாரத்தின் பெயர் :		சத்திய சாயிபாபா
அவதாரம் தெரிவித்த நாள்	:	23 - 5 - 1940
முன்னைய அவதாரம் :		சிர்டி சாயிபாபா
வரப்போகும் அவதாரம்	:	பிரேம சாயிபாபா

உலகில் அமைதி உண்டாகட்டும்
அது தனிஒருத்தரிடம் ஆரம்பமாகட்டும்

வைத்திய கலாநிதி R. கணேசமூர்த்தி

" மானிட வரலாற்றில் இன்று நாங்கள் கொடிய ஒரு நீர்ச் சூழலின் நடுவில் அகப்பட்டது போன்றதொரு இக்கட்டில் இருக்கின்றோம். உலகில் ஒரு கோடியிலிருந்து மறுகோடியீறாக உள்ள மனித ஜாதியைப் பீதி பீடித்துள்ளது. எங்கே பார்த்தாலும் கிலேசமானது மனிதரிடமிருந்து உறக்கம், ஓய்வு, மகிழ்ச்சி, சிரிப்பு அனைத்தையும் பறித்துக் கொண்டுவிட்டது. குணசீலத்தைக் காண்பது அரிது. கொடுமை கோலோச்சுகின்றது. குடும்பத்தில், சமூகத்தில், நாட்டில், மானிட சமுதாயத்தில் 'அமைதி அமைதி' என்ற ஓலம் பரிதாபமாக ஒலிக்கின்றது."

— பேராசிரியர் N. கஸ்தூரி
பிரசாந்தி வாஹினியில்

அமைதி என்பது என்ன ?

அமைதி என்பதற்கு வெவ்வேறு மனிதர் வெவ்வேறு கருத்தை வைத்திருக்கின்றனர்.

அகராதிக் கருத்து :

சமாதானம்; நல்லிணக்கம்; நிம்மதி; சாந்தம்; நிதானம்.

நாட்டுத் தலைவரின் கருத்து :

அரசியல் கிளர்ச்சிகள் இல்லாமை அண்டை நாடுகளோடு பூசல் — பிணக்கு இல்லாமை; சமூகத்திலும்; பொருளாதாரத்திலும் சீர்குலைவில்லாமை.

ஆத்மீகவழி செல்பவரின் கருத்து :

புலன்கள் வெல்லப்பட்டு; சமநிலையுற்று மனம் அடங்கப் பெறுதல்.

சாதாரண குடிமகனின் கருத்து :

வாழ்க்கையில் வெற்றி; ஒடுக்கு முறை இல்லாமை; அடிப்படைத் தேவைகளும்; விருப்பங்களும் நிறைவேறுதல்; சுருங்கச் சொன்னால் சஞ்சலம் இல்லாமையும்; இடரில்லாத எதிர்காலமும்.

இவற்றின்படி பார்த்தால் அமைதியை விபரிப்பது கடினம்.

'அது இல்லாத நிலை, இது இல்லாத நிலை' என்று அமைதியை எதிர்நிலையாகச் சொன்னாலும், உண்மையில் அமைதியானது நிறைவு தரும் ஓர் அக அனுபவமாகும்.

மனிதனின் சுபாவம் அமைதியே. அது அடிப்படை மனித இயல்பான அன்பின் தோற்றம்.

அன்பு எண்ணமாக வெளிப்படும் போது, சத்தியமாகின்றது.

அன்பு செயலாக வெளிப்படும் போது, தர்மமாகின்றது.

அன்பு உணர்ச்சியாக வெளிப்படும் போது, சாந்தியாகின்றது.

அன்பு புரிந்து கொள்தலாகும் போது, அஹிம்சையாகின்றது.

ஐந்து அடிப்படை மனித மேம் பாடுகள் இவைகள் தாம். எல்லா உயர்குண நலன்களும் இவற்றினுள் அடங்குகின்றன.

விஞ்ஞானமும், தொழில்நுட் பமும் பிரமாதமாக முன்னேறியிருந் தும் அமைதி மனிதனுக்கு எட்டாத தாகவே இருக்கின்றது.

அமைதியும் ஏனைய உயர் மேம் பாடுகளும் தோன்றி நிலைப்பதற்குத் தடையாய் இருப்பது என்ன ? இரண்டு காரணங்களைச் சொல்லலாம்.

அ) உன்னத மேம்பாட்டுப் பண்புகள் எதிர்மறையான குணங்களி னால், குறிப்பாக ஆறு உட்பகை வர்களினால் ஆழமாக அடி நினைவு மனத்திலே புதைக்கப் பட்டுள்ளன. அந்த அறுவர்களா வோர் : ஆசை, கோபம், அவா பற்று, பெருமை, பொறாமை. கீழுள்ள வரைகோட்டுப் படம் இதனை விளக்குகின்றது:



ஆ) மனம் நலந்தரும் மனித நேயப் பண்புகளை விடுத்து உலகில் சிக்குண்டு செயற்படுதல் இரண் டாவது காரணம்.

உலகியலைச் சார்ந்த நிலையில் (பெரும்பாலான நேரம் உலகியலோடு கழிகின்றது) புலன்கள் மேலோங்கி நிற்கின்றன. புலன்கள் மனத்தை

ஆட்டிப் படைக்கின்றன. மனமும் அதே பாங்கில் புத்தியையும், மனச் சாட்சியையும் தனக்குப் பணிய வைக்கின்றது.

மனம் மனிதநேயத்தைச் சார்ந்து நிற்கும்போது மனச்சாட்சி மேலோங் குகின்றது. புத்தியையும், மனத்தை யும், புலன்களையும் அது அடக்கி ஆளுகின்றது. பூரண சொரூபத்தோடு மனச்சாட்சி இயங்குகையில் புலன் களும், மனமும் மறைந்துவிடுகின்றன.

உலக வாசனையை உதறிவிட்டு மனிதநேயம் கொண்டவராய் ஒருத் தர் மாறுவதே உயர்மாற்றம் எனப் படும். இந்த உயர்மாற்றத்தைக் கீழுள்ள வரைகோட்டுப் படம் எடுத் துக் காட்டுகின்றது.

ஆறு பகைமைக் குணங்கள்

↑

↓

ஐந்து மனித மேம்பாடுகள்

A

இவ்வுயர் மாற்றமானது ஒருத் தரின் இயல்பிலும், நடத்தையிலும் பிரதிபலிக்கவே செய்யும். உணர்வு உந்துதலில் செயற்படும் மிருக சுபா வம் மாறி, விவேகத்தோடு கூர்ந்து ணரும் மனித சுபாவமும், ஈற்றில் சகஜமான தேவ சுபாவமும் அவரிடம் தலைதூக்கும். எண்ணம், சொல், செயலில் நிலவும் வேறுபாடுகள் தூய்மையுற்று ஒருமைப்பாட்டுக்கு இடங்கொடுத்து நீங்க, மனச்சாட்சி முழுப்பொலிவோடு பிரகாசிக்க ஆரம்பிக்கின்றது. தனித்தன்மை என்பது மறந்துவிடப்படுகின்றது. மனமானது புத்தி, மனச்சாட்சி ஆகிய வற்றின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் வருவதனால் மனோவிகாரங்களி லிருந்து அது விடுவிக்கப்படுகின்றது.

மனத்தின் தொழிற்பாடு

உலகியற் பாங்கு	மனித நேயப் பாங்கு
புலன்கள்	மனச் சாட்சி
↓	↓
மனம்	புத்தி
↓	↓
புத்தி	மனம்
↓	↓
மனச் சாட்சி	புலன்கள்

(நான், எனது) ——————→ (நாம், எமது)

(ஆறு உட்பகைவர்கள்) உயர் மாற்றம் (ஐந்து மனித மேம்பாடுகள்)

(இயல்பு) விலங்கு சுபாவம் → மனித சுபாவம் → தெய்வீக சுபாவம் அல்லது தேவ சுபாவம்

(நடத்தை) உணர்ச்சி உந்துதல் → கூர்ந்துணரும் → சகஜபாவம் / தேவபாவம் விவேகம்

வேறுபாடு —— எண்ணம், சொல், அங்கஜாடை, செயல் ——→ தூய்மையும் ஒருமைப்பாடும்

தன்னலம் சிற்றியல்பு ——————→ பரநலம் பேரியல்பு

இந்த உயர்மாற்றத்தை அடைவது எப்படி ?

1) தன் வாழ்க்கையின் இலட்சியம் இன்னது என்று ஒருத்தர் முடிவு எடுத்தாக வேண்டும்.

2) அதை அடைவதற்கான மனவுறுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

3) பற்றுதலின்றி, விவேகத்தோடு விசாரணை செய்து தேவையான அறிவைத் தேடிக்கொள்ள வேண்டும். மறைநூல்களையும், ஞானிகள் சாதுக்களின் உபதேசங்களையும் துணைக்கொள்வதோடு, கீழுள்ள வினாக்கள் குறித்துச் சிந்தனை செய்யவும் வேண்டும்.

நான் யார் ?
எங்கிருந்து வந்தேன் ?
எங்கே போகின்றேன் ?
நிலையற்று மாறுவது எது ?
மாறாது நிலையாயுள்ளது எது ?

4) **வேண்டிய பயிற்சி ;**

பழக்க வழக்கங்களில் மாற்றம்; சுய ஒழுக்கத்தில் கட்டுப்பாடு; சம்பிரதாயக் கட்டுகளையும், மந்தை மனப்பான்மையையும் கடந்து செல்ல வேண்டும்.

நடைமுறைக்குச் சில குறிப்புகள் :

- இன்முகம்; கலகலப்பான போக்குக்கு; உண்மையும் இனிமையும் ததும்பும். மிருதுவான பேச்சு,
- *3HV* - சிரசும், இதயமும், கரங்களும் ஒருங்கிணைந்து செயற்படல்.
- ஆசைகளைக் கட்டுக்குள் வைத்திருத்தல்.
- வேலை - எப்போதும் முயற்சியுள்ளவராயிருத்தல்; சேவைகளில் ஈடுபடல்.

– *ABC - Always Be Careful*
(எப்போதும் எச்சரிக் - கையாயிரு)

– - *Avoid Bad Company*
(தீய சகவாசத்தை விலக்கு)

– எண்ணம், சொல், செயலில் தூய்மையும், ஒருமையும் பிரதி பலித்தல்.

– ஆத்மீக நெறி - நற்சிந்தனைக் குரிய வாசகம் ஒன்றை இடை விடாது உச்ச ரித்தல்.

- பிரார்த்தனை; அமைதியாக அமர்ந்திருத் - தல் அல்லது தியானம்.

5) பின்வரும் அருள் மொழிகளில் ஒன்றைச் சதா சிந்தை செய்தல்:

– எப்போதும் உதவி செய்
ஒரு போதும் தீங்கு செய்யாதே

– எல்லோரையும் நேசி
எல்லோருக்கும் சேவை செய்

– உழைப்பே வழிபாடு
கடமையே கடவுள்

– மானவ சேவையே மாதவ சேவை.

6) வரித்துக் கொண்ட இலட்சியத் தை அடைவதில் ஆழ்ந்த சிரத் தை கொண்டிருக்க வேண்டும்.

7) இந்த மார்க்கத்தில் சின்ன நெருக்கடி நேர்ந்தாலும், என்ன தொல்லைகள் குறுக்கிட்டாலும் தயங்கி நிற்கக் கூடாது.

8) செயல்களின் பயனில் நாட்டம் கொள்ளக்கூடாது.

9) ' எனக்குச் சாந்தி வேண்டும் என்ற தேடலிலேயே பரிகாரமும் இருக்கின்றது. ' எனக்கு ' என் பதும், ' வேண்டும் ' என்பதும் அகற்றப்பட்டுவிட்டால் எஞ் சி நிற்பது, ' சாந்தி ' யே.

உயர் மாற்றமானது மெது வாக ஆனால் ஒரு சீராக நிகழ்வ தாகும். அது ஓர் ஏணியில் ஏறுவது போன்றது. வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் எச்சரிக் கையாயில்லாது விட்டால் எளிதில் சறுக்கல் ஏற்பட்டுவிடும்.

உயர் மாற்றமடைந்தவரை இனம் காண்பது எப்படி ? அவர் முகம் களை பொருந்தியதாய் இருக்கும், கண்களில் புத்தொழி வீசும்; சுவாசம் கதிபிசகாது நடக்கும்: அவருடைய பார்வை யில் உறுதியும், குரலில் செம்மை யும் இருக்கும்; அவர் மாறா நல்லுணர்வும், பெருந்தன்மை யும் உடையவராயிருப்பார்.

இருபது வயதில்
பாபா எழுதிய கடிதம்

1947 ஆம் ஆண்டு. பாபாவுக்கு இருபது வயது. அவருடைய அண்ணன் சேஷம ராஜு, ஒரு தெலுங்கு மொழி ஆசிரியர், தனது தம்பி பாபாவின் அருமையையும், மகிமையையும் புரிந்துகொள்ள முடியாதவராக இருந்தார். அவருடைய தம்பியைக் காண்பதற்காக கார்களில் பலர் தினமும் சித்திராவதி நதியின் கரைக்கு வந்து, 'அந்தச் சாதாரண கிராமப் பையனை' கார்களில் ஏற்றி ஆபத்துக்கள் கொண்ட நாகரிக நகரங்களுக்கு அழைத்துச் செல்வதைப் பார்த்து மிகவும் கவலை கொண்டார். பத்திரிகைகளில் வந்த சில வார்த்தைகளும் அவரைத் துன்புறுத்தின. ஆகவே தம்பிக்கு அறிவுரையும் கண்டிப்புமாக ஒரு கடிதம் எழுதினார். தான் சமூகத்திலிருந்து படித்த பாடம், மனிதனுடைய குண இழிவுகள், புகழ் தரக் கூடிய படுகுழிகள் இவற்றைக் காட்டி எழுதினார்.

அந்தக் கடிதத்துக்கு பாபா தமையனுக்கு எழுதிய பதில் கடிதம் கீழே தருகிறோம்.

இக்கடிதம் பாபாவை பகவான் ஆக காட்டுகிறது. தமையனுக்கு எழுதினாலும் தலைப்பில் 'என் மேல் பக்தி கொண்ட அனைவருக்கும்' என்று போட்டிருந்தார்.

25 - 05 - 1947

என் அன்பிற்குரியவரே,

நீங்கள் எழுதி அனுப்பிய கடிதம் கிடைத்தது. அதிலே ஓயாதவெள்ளம் என வரும் உங்கள் பக்தியையும், அன்பையும் கண்டேன்; அத்துடன் அதில் அடி. நீரோட்டமாக சந்தேகங்களும், ஆவலும் இருந்தன. நான் உங்களுக்கு சொல்வது என்ன வென்றால்; ஞானிகள், யோகிகள், துறவிகள், முனிவர்கள் போன்றோரின் இதயங்களையும் இயற்கையையும்

ஆழம் காணமுடியாது. மனிதருக்கு பல விதமான குண விசேஷங்களும் மனோபாவங்களும் உண்டு. ஆகவே ஒவ்வொருவரும் தமது கோணத்தில் நியாயம் கண்டு, தமது சுபாவத்தின் படியே பேசி விவாதிப்பர். ஆனால், நாங்கள் எமது பாதையையும், எமது சொந்த ஞானத்தையும், எமது உறுதியையும் கடைப்பிடிக்க வேண்டும்; பொதுவான மதிப்பீட்டினால் பாதிக்கப்படல் ஆகாது. காய்த்த மரம்தான் கல் எறியால் தாக்கப்படும். என்பது பழமொழி. நல்லவர்கள் கெட்டவரின் கீழான பேச்சுக்கு ஆளாவார்கள். ஆனால், கெட்டவர்கள் நல்லவரின் பரிதாபத்திற்கே உட்படுவார்கள். இதுதான் உலகநியதி. இவை நடக்காவிடில், ஒருவர் ஆச்சரியம் அடைதல் வேண்டும்.

மக்கள் கூட பரிதாபத்திற்கே உரியவர், கண்டனத்துக்கு அல்ல. அவர்களுக்கு சரியாகச் சீர்தூக்கிப் பார்ப்பதற்குப் பொறுமை இல்லை. அவர்கள் காமம். கோபம், கர்வம் ஆகியவற்றால் நிரம்பி இருப்பதால், தெளிவாகப் பார்க்கவும், முழுமையாகப் புரிந்து கொள்ளவும் முடிவதில்லை. ஆகவே, பல விதமாக எழுதுவார்கள் அவர்களுக்கு எது சரி எனத் தெரிந்தால், இப்படியாகப் பேசவோ, எழுதவோ மாட்டார்கள். நாங்களும் அந்த வியாக்கியானங்களுக்கு எவ்வித மதிப்பும் கொடுக்கப்படாது. நீங்கள் செய்வதுபோல், அவற்றை மனத்தில் கொள்ளக்கூடாது. உண்மை ஒருநாள் கட்டாயம் வெல்லும். பொய்மை ஒரு போதும் வெல்ல முடியாது. பொய்மை உண்மையை ஆட்கொள்வது போல் தோன்றலாம்; ஆனால் அந்த வெற்றி மறையும். உண்மை நிலைக்கும்.

மக்கள் போற்றும் போது பூரிப்பதும், மக்கள் அலட்சியப்படுத்தும் போது சுருங்குவதும் பெரியோரின் முறை அல்ல உண்மையில், ஒரு புனித நூலாவது பெரியோரின் வாழ்வைக் கட்டுப்படுத்த, பழக்க வழக்கங்கள் மனோநிலைகள் பற்றி விதிகள் தருவதில்லை. தாங்கள் செல்ல வேண்டிய பாதை அவர்களுக்குத் தெரியும். அவர்கள் ஞானம் அவர்களைக் கட்டுப்படுத்தி அவர்கள் செயல்களைப் புனிதமாக்கும் தன்னம்பிக்கை, நன்மைதரும் செயல்கள் - இந்த இரண்டும் தான் விசேஷமான அம்சங்கள். அத்துடன் பக்தர்களின் நன்மைக்காக உழைப்பார்கள்; அவர்களின் செயல்களின் பலாபலன்களைக் கொடுப்பார்கள். நான் இந்த இரண்டையும் கடைப்பிடிக்கும் போது, நீங்கள் எதற்காக சமசியம், கவலை ஆகியவற்றால் துன்புற வேண்டும்? பார்க்கப் போனால், மக்களின் பாராட்டும் தூற்றலும் ஆத்மாவை- அந்த உண்மைப் பொருளை - தொடுவதில்லை; வெளி உடம்பைத்தான் அவை தொட முடியும்.

எனக்கு ஒரு 'கடமை' *(TASK)* உண்டு: நான் மனித குலத்தைக் போஷிக்க வேண்டும். அவர்கள்

ஆனந்தமாக வாழ வழி செய்ய வேண்டும். எனக்கு ஒரு 'சபதம்' (Vow) உண்டு: சரியான வழியிலிருந்து தவறியவர்களுக்கு வழிகாட்டி, நல்லவர்களாக்கி அவர்களைக் காப்பாற்ற வேண்டும். நான் விரும்பும் ஒரு 'வேலை' யுடன் பிணைந்துள்ளேன்: ஏழைகளின் துன்பங்களைத் துடைப்பது, அவர்கள் வேண்டியதைக் கொடுப்பது நான் பெருமைப்பட காரணம் உண்டு, என்னை தொழுவோரையும், மரியாதை செய்வோரையும் நான் சரிபாதையில் விடுகிறேன். 'பக்தி'க்கு ஒரு வரைவிலக்கணம் வைத்திருக்கிறேன். என்மேல் பக்தி வைத்திருப்பவர்கள் மகிழ்வையும் துக்கத்தையும், இலாபத்தையும் நட்டத்தையும் மனோபலத்துடன் ஏற்க வேண்டும் என எதிர் பார்க்கிறேன். என்னிடம் பிணைந்தோரை நான் எப்போதும் கைவிட மாட்டேன். இத்தகைய நன்மை தரும் வேலையில் நான் ஈடுபட்டிருக்கும் போது, நீங்கள் நினைப்பது போல், என் பெயர் எப்போதாவது களங்கம் உண்டாக்கப்படுமா? அத்தகைய அபத்தமான பேச்சுக்கு செவி சாய்க்க வேண்டாம் என்று அறிவுறுத்துகிறேன். மகாத்மாக்கள், மற்றவர்கள் பெரியார் என்று கூறுவதால் பெருமை அடைவதில்லை. சிறியவர்கள் என்று மற்றவர்கள் கூறுவதால் சிறியவர் ஆவதும் இல்லை. அபினிலும், கஞ்சாவிலும் களிப்படைந்து கொண்டு தம்மை மிஞ்சமுடியாத யோகிகள் என்று கூறுபவர்கள், தமது ஆடம்பர போசனங்களையும் பெருமையையும் நியாயப்படுத்துவதற்கு ஆத்மிக நூல்களை மேற்கோள் காட்டுபவர்களும், சரி பிழை மூடிமறைக்கும் வாய் வல்ல வீரர்களான உலர்ந்த தூசிக்கு நிகர் படிப்பாளிகளும், இவர்கள் தாம் பாராட்டாலும், தூற்றலாலும் அசைபவர்கள்.

நீங்கள் துறவிகள், தெய்வீக மனிகர்கள் பற்றிய வாழ்க்கைச் சரிதைகளைப் படித்திருப்பீர்கள். அவற்றிலே இன்னும் அதிகமான பொய்களும் கொடுமையான அவதூறுகளும் அவர்கள் மேல் சுமத்தப்பட்டிருப்பதை படித்திருப்பீர்கள். இதுதான் மகாத்மாக்களின் விதி எல்லா காலங்களிலும். ஆகவே இவற்றை ஏன் பெரிசாக மனத்தில் கொள்கிறீர்கள்? நட்சத்திரங்களைப் பார்த்து நாய்கள் குரைப்பதை நீங்கள் கேட்பதில்லையா? எவ்வளவு காலம் அவர்கள் இப்படிச் செய்ய முடியும்? நிஜம் விரைவில் வெல்லும்.

நான் ஏற்றுக் கொண்ட வேலையையும் (Mission) சங்கற்பத்தையும் விடமாட்டேன். நான் அவற்றைச் செய்து முடிப்பேன் என்று எனக்குத் தெரியும். அதனால் வரக்கூடிய மரியாதை அவமதிப்பு, புகழ் இகழ்ச்சி எல்லாவற்றையும் ஒரேமாதிரியாக மதிப்பேன். என் உள்ளே ஒரு பாதிப்பும் இல்லை. வெளி உலகிலே மட்டும் செயல்படுகிறேன். பேசுறேன் நடக்கிறேன், மக்களுக்கு எனது வருகையை அறிவிப்பதற்காக. அல்லாவிடில், இவற்றால் கூட நான் பாதிப்பு அடைவதில்லை.

நான் ஒரு நாட்டிற்கும் சேர்ந்தவன் அல்ல; எனக்கு ஒரு பெயருடனும் தொடர்பு இல்லை. 'எனது' 'உனது' என்பது எனக்கு இல்லை. நீங்கள் அழைக்கும் எந்தப் பெயருக்கும் நான் பதிலளிக்கிறேன். என்னை எங்கு அழைத்தாலும், போகிறேன். இது தான் எனது முதல் சபதம், இதை நான் யாருக்கும் இதுவரை தெரிவிக்கவில்லை. எனக்கு உலகம் வெகு தொலைவில் உள்ளது. நான் நடப்பதும், செயல்படுவதும் மனித குலத்திற்காகத்தான். யாரானாலும், எந்த முறையினாலாலும், எவ்வளவு காலம் முயன்றாலும், எவராலும் எனது மகிமையைப் புரிந்து கொள்ள இயலாது.

நீங்களே அந்த முழுமையான மகிமையை வரும் வருடங்களில் பார்க்க முடியும். பக்தர்களுக்குப் பொறுமையும், சகிப்பும் வேண்டும்.

இந்த உண்மைகள் தெரியப் படுத்த வேண்டும் என நான் கவலையோ ஆவலோ அடையவில்லை. இந்த வார்த்தைகளை எழுத எனக்குத் தேவையில்லை. நான் எழுதினேன்; ஏனெனில் நான் எழுதாவிடில் நீங்கள் துன்பம் அடைவீர்கள் என்று உணர்ந்தேன்.

ஆகவே உங்கள் பாபா.

(ஆதாரம், Satyam Sivam Sundaram part I By KASTURI (Edintion 1981) Pages 8 - 11. தமிழாக்கம் : நந்தி.)

குரு பூர்ணிமா

(சொற்பொழிவு பிரசாந்தி இராஜயோகன்)

எனது அன்பிற்குரிய சுவாமியின் கமல பாதங்களுக்கு வணக்கங்கள்.

குரு பிரம்மா
குரு விஷ்ணு
குரு தேவோ மகேஸ்வரா
குரு சாக்ஷாத் பர பிரம்மா!
தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ:

குரு. பிரம்மா: குருதான் பிரம்மா. அவர் தான் தோற்றுவிப்பவர். பிரபஞ்சம் பிரமத்தால் நிறைந்துள்ளது.

குரு விஷ்ணு: குருதான் விஷ்ணு. நடாத்துபவர். பிரபஞ்சம் அவர் செயற்பாடு. காரணத்திற்கும் வினைவிற்கும் பின்னிற்கும் உணர்வு கடவுள் தான். விஷ்ணுகுரு, ஆதரிப்பவர், அறியாமை இருளை நீக்குபவர்.

குரு தேவோ மகேஸ்வரா: குரு தான் மகேஸ்வரன். யார் அவர்? அவர்தான் பிரபஞ்சத்தில் அனைத்தையும் ஆள்பவர். பிரபஞ்சம் சரியான முறையில் இயங்க ஆணையிட்டு நியமிப்பது அவரே. சூரியோ

தயம் அதன் அஸ்தமனம், காலங்கள், மழை, பகல் இரவு அனைத்தும் அவர் ஆணையின்படியே இயங்குகிறன.

குரு சாக்ஷாத், பரபிரம்மா தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ.

எல்லாம் வல்ல, எல்லாம் அறிந்த எங்கும் நிறைந்த அந்த குருவுக்கு கைகூப்பி வணங்குகிறோம். அவரே கடவுள்.

குரு பூர்ணிமா, ஜூலையில் புனித பௌர்ணமி. பிரசாந்தி நிலையத்தில் குரு வணக்கத்திற்கான தெய்வீக நாள். உலகம் பூராக உள்ள பக்தர்கள் அங்கு ஆவலுடன் வந்து தமது ஆன்மிக பற்றரிகளைப் பூரணமாக்குவதோடு, பகவானின் செய்தியையும் கேட்கும் மங்கள நாள். குரு பூர்ணிமா நாளை கோடானுகோடி பக்தர்களுடன் கொண்டாடும் இவ்வேளையில், இந்த நாளின் மகத்துவத்தை விளங்குவதோடு எமது குருவையும் பக்தியுடனும் நன்றியுடனும் மனதில் கொள்வோம்.

குரு பூர்ணிமாவின் உண்மையான அர்த்தம் குருவை பூஜைப் பொருட்களுடன் வணங்குவதில் அல்ல எமது மனத்திலிருந்து அறியாமையின் இருளை அகற்றுவதிலேயே உள்ளது.

பூர்ணிமா முழு நிலாவை குறிப்பது முழுநிலா இன்பம் நிறைந்த மனத்தைக் குறிக்கும். முழுமையான தூய மனம் ஒளி தரும், அது ஆன்மாவின் பிரதிபலிப்பு ஆகவே மனத்தை பூரணமாக தூய்மையாக்குவதற்கு குரு பூர்ணிமா உகந்த நாள். ஒருவர் தனது குருவிற்கு அளிக்கக் கூடிய மிகச் சிறந்த பூஜைப் பொருள் அன்புதான். உண்மையான குரு எமது இதயத்தில் இருக்கிறார். இதயத்தைத் தூய்மையாக்கினால் தெய்வீகம் அங்கு இருக்கும் என்று சுவாமி சொல்கிறார் கடவுளைத் தியானித்து கடவுளை மிஞ்சிய குரு இல்லை என்று உணர்பவர்களுக்கு, தினமும் குரு பூர்ணிமா தான்.

இன்றைய தினம் குரு பூர்ணிமா என்று கூறப்பட்டாலும் அது அவ்வளவுசரி இல்லைஎன்று சுவாமி கூறுகிறார் எனெனில் அந்தப் பெயர் சில குருக்களால் வைக்கப்பட்டது அன்று சிஷ்யர்களிடம் இருந்து நிவேதனம் வாங்குவதற்காக இந்த நாளுக்குச் சரியானபெயர் வியாச பூர்ணிமாவியாசர் பிறந்து பௌர்ணமியில், நான்கு வேதங்களைத் தந்தது பௌரணமியில். அந்த நாளில் தான் நாம் எமது மனத்தை முழு நிலாபோல் தூய்மையாக பிரகாசமாக ஆக்க வேண்டும். அந்த நாளில் தான் வியாசர் 18 புராணங்களையும் நிறைவு செய்தார். காலப்போக்கில் வியாச பூர்ணிமா, குரு பூர்ணிமாவாக அழைக்கப்பட்டது. மனத்தைப் புனிதமாக்கவும், பிரபஞ்சத்தை விளங்கவும் இதுதான் நாள்.

அமைதியின்மையின் அதிகரிப்பும் ஒழுக்கத் தரத்தின் குறைதலும் ஒரு குரு அவதாரமாகத் தோன்றக் காரணமாயின யார் உண்மையான குரு? உலகியல் கல்வியைக் கற்பிக்கும்

ஒருவரா? அல்லது பொருட்களின் குணங்களை ஆய்பவரா? கண்டிப்பாக இல்லை என்கிறார் சுவாமி, அவர்கள் ஆசிரியர்கள் மட்டுமே. உண்மையான குரு பிரம்மானந்தத்தின் சொரூபம். அது ஒரு பரமானந்த இன்ப நிலை. அந்த ஆனந்தத்திற்கு நிகராக இந்தப் பிரபஞ்சத்தில் வேறு ஒன்றும் இல்லை. உலகின் எல்லா இன்பங்களும் பிரமானந்தத்தில் அடங்கும்; அது வாழ்வின் பொருள், அறம், சமய, ஆன்மிக நிலைகளைத் தாண்டியதாகும்.

குருவின் அடுத்த நிலை பரம சுகம், அது மிக உயர்ந்த ஆனந்தம் குருவின் மூன்றாவது நிலைதான் இறுதியானது, நேரத்தையும் இடத்தையும் தாண்டியது. நான்காவது நிலையில் குரு ஞானத்தின் சொரூபமாகின்றார் - ஞானமூர்த்தி உண்மையான ஞானம் ஒருமைப்பாடு, தனது உண்மை நிலையின் காட்சி அடுத்த நிலையில் அனைத்தும் தாண்டப்படும்; சூடு குளிர், மகிழ்ச்சி துக்கம், இலாபம் நஷ்டம், புகழ் இகழ்ச்சி எல்லாம் இந்த நிலை கடவுள் ஒருவருக்கே உரியது - சற்குரு.

சுவாமி சொல்கிறார்: நீ உன்னை மனித உருவில் பார்த்தால் ஒரு சிஷ்யனாகக் கொள்ளலாம். ஆனால் உன்னை ஆத்மாவின் சொரூபம் என உணர்ந்தால் நீயே உனது குரு ஆகின்றாய். உன்னிடம் தஞ்சம் கொள். உனது உண்மையை உணர் அதுதான் சரியான வழி. குருவிடம் பக்தி வைப்பதும் அவ்வண்ணமே. ஆகவே நாங்கள் தான் எமது குரு. காயத்திரி மந்திரமும் இதைத்தான் காட்டுகிறது.

ஆகவே இன்றைய தினம் எமது மனத்தை அன்பினால் நிரப்புவோம் நமது இதயம் அன்பினால் நிரம்பும் போது சுவாமியின் கருணை முழுமையாக கிடைக்கின்றது.

எமது வாழ்க்கையை முழுமையாக சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை என்ற முறைகளின் படி வாழ்வதே, இந்த நாளில் எமது எல்லாம் வல்ல குருவுக்கு நாம் அளிக்கும் மரியாதையாகும். இதைவிட சிறந்தது வேறு ஒன்றும் இல்லை. ஆகவே நாம் குருவிற்கு நன்றி செலுத்துவோம்.

நன்றி கடவுளே : உங்கள் ஓயாத அன்பிற்கு.

உங்கள் அறிவு உரைகளுக்கு.

உங்கள் அளவிலா கருணைக்கு.

மேலாக, என்றும் உங்கள் வருகைக்கும் வழிகாட்டலுக்கும்.

நன்றி சுவாமி.

ஜெய் சாயிராம்

(ஜூலை 12 இல் பஜனையின் பின் கொழும்பு பார்ன்ஸ் பிளேஸ் சத்திய சாயி நிலையத்தில் இளைஞர் குழுவைச் சேர்ந்த பிரசாந்தி இராஜயோகன் ஆற்றிய ஆங்கிலச் சொற்பொழிவின் தமிழாக்கம்.)

வவுனியாவில் சாந்தம் மந்திர்

முத்தனை, முதல் சோதியை, முக் கண் அப்பனை, முதல் வித்தினை,
சித்தனை, சிவலோகனை, திரு நாமம் பாடித் திரி தரும்
பக்தர்காள் ! இங்கே வம்மின், நீர்; உங்கள் பாசம் தீரப் பணிமினோ;
சித்தம் ஆர் தரும் சேவடிக்கண், நம் சென்னி மன்னி, திகழுமே !

– திருவாசகம் –

ஆம் ! ஸாயீசனைப் பாடும் பக்தர்காள் வாருங்கள். முத்தனை, முதல் சோதியை, முதல் வித்தினை, சித்தனை ஏற்றிப் போற்றிப் பாடத் தகுந்த மந்திரை ஸாயீசன் எங்களுக்கு அருளியுள்ளான். வாருங்கள் வந்து தரிசியுங்கள்.

2 - 11 - 98 வவுனியா வாழ் பக்தர்களுக்கு மட்டுமல்ல சாயி அன்பர்கள் அனைவருக்கும் ஒரு ஆனந்தமான நாள். சாந்தம் சாயி மந்திரின் திறப்புவிழா நடைபெற்றது அன்று தான்.

நாட்டின் நானா திசைகளில் இருந்தும் வந்து குவிந்த ஏராளமான பக்தர்களின் முன்னிலையில் இலங்கை சாயி நிலையங்களின் மத்திய இணைப் பாளர் ஸ்ரீ செ. சிவஞானம் ஐயா அவர்களினால் 'சாந்தம்' மந்திர் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

பகவான் பாபாவினால் சாந்தி ஆண்டாக பிரகடனப் படுத்தப்பட்ட இவ்வாண்டில் 'சாந்தம்' மந்திரின் திறப்பு விழா மிகப் பொருத்தமானதே

சுவாமியினால் ஆசீர்வதிக்கப் பட்ட அத்திவாரத்திற்கு இடப்பட வேண்டிய பொருட்களைக் கொண்டு 11 - 06 - 1992 வியாழக்கிழமை மதியம் 12 மணிக்கு அத்திவாரம் இடப்பட்டு கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

பக்தியைப் பெருக்குவதற்கு செல வழிக்கப்படுவதை விட பணத்தைச் செலவழிப்பதற்கு வேறு சிறந்த வழி எதுவும் இருக்கமுடியாது. இதனால் தனிநபர் மட்டுமல்ல முழு சமூகமும் பயன் பெறும் என்பது பகவானின் திருவாக்கு. வவுனியா வாழ் பக்தர்களும், வெளியிடங்களில் உள்ள பக்தர்களும் சிறிது சிறிதாக பக்தியுடன் வழங்கிய பணம் இன்று ''சாந்தம் மந்திர்'' ஆக உருவெடுத்து பார்ப்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் பேரானந்தம் அளிக்கிறது. வவுனியாவில் இந்த மந்திர் மூலம் பக்தி பெருகும் என்பதில் எள்ளத்தனையும் சந்தேகம் இருக்க முடியாது.

இதன் கட்டுமானப் பணிகளில் அவ்வப்போது பங்கு கொண்ட சாயி இளைஞர் அணியினரும், சேவாதனத்தினரும், ''சாயிராம், சாயிராம்'' என்று சிந்திய வேர்வைத் துளிகள் என்றென்றும் சாந்தம் மந்திரில் எதிரொலித்துக் கொண்டிருக்கும்.

புட்டபர்த்தியில் உள்ள சாயி மந்திரினை ஏறத்தாள ஒத்ததாகவே இம்மந்திரும் அமைக்கப்பட்டுள்ளது.

பகவானினால் ஆசீர்வதிக்கப் பட்ட இயந்திரத்தகடு வைத்து பிரதிஷ்டை செய்யப்பட்ட ஓம்கார கணபதியை முகப்பில் வணங்கிக் கொண்டு மந்திரைத் தரிசிப்போம்.

பகவான் பாபா தரிசனம் தருவ தற்கு வசதியாக அமைக்கப்பட்டுள்ள மலர்ந்த தாமரை வடிவ மாடமானது (*Balcony*) மலராதிருக்கின்ற எமது இதயம் பகவான் பாபாவின் அவதார வருகையினால் மலரும் என்பதை குறிப்பாயுணர்த்தி நிற்கின்றது. இதை யடுத்துள்ள அறை சுவாமி வந்து தங்கு வதற்கென சகல வசதிகளுடன் பிரத் தியேகமாக அமைக்கப்பட்டுள்ளது.

கிழக்கே பார்க்கும் மூலஸ்தானத் தைக் கொண்டுள்ளது நீண்டு அகன்ற பஜனை மண்டபம். மூலஸ்தானத்தில் அபயகரத்துடன் பர்த்தி நாதரினதும், ஷிர்டி நாதரினதும் திருவுருவப் படங் கள் (சுவாமியினால் தொட்டு ஆசீர்வதிக்கப்பட்டவை) வைக்கப் பட்டுள்ளன.

மூலஸ்தானத்திற்கு நேர் எதிரே மண்டபத்தின் பிற்பகுதியில் கிருஸ்ண பரமாத்மா, பார்த்தனுக்கு கீதோப தேசம் செய்த காட்சி மிகவும் தத் ரூபமான சிற்பமாக அமைக்கப்பட் டுள்ளது. உலகியல் செயற்பாடுகளி னால் மனம் அலைக்கழிப்புற்று, சஞ் சலத்துடன் வரும் மக்களுக்கு சாந்தி யைத் தரும் மண்டபம் அல்லவா அது.

அம் மண்டபத்தில் இக் கீதோப தேசக் காட்சி மிகப் பொருத்த மானதே.

மண்டபத்தின் பக்கச் சுவர்களில் வரிசையாக வைக்கப்பட்டுள்ள தசாவ தார சிற்பங்கள், தர்மத்தைக் காக்க யுகந்தோறும் அவதரிக்கும் நம் காருண்ய பகவானின் கருணையை நினைவூட்டி நிற்கின்றன.

இந்த மண்டபத்தின் சிற்பங்கள் யாவும் சிற்பாசிரியர் ஸ்ரீ செ. சிவப் பிரகாசம் அவர்களினுள் பகவான் நின்று இயக்கியதால் உயிரோட்ட முடையனவாய் விளைந்தவை என் பதை விளக்குகின்றன.

மண்டபத்தின் பிற்பகுதியின் மேல் மாடியில் அமையவிருக்கின்றது நூலகம். இது பெருமளவு ஆத்மிகப் புத்தகங்களுடன் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் நூலகத்திற்கு நிரந் தரமான ஒரு இடத்தை அமைத்துக் கொடுக்கும்.

இம்மண்டபத்திற்கு ஆரம்ப வரை படம் அமைத்ததிலிருந்து திறப்பு விழாச் செய்தது வரைக்கும் பகவான் பாபா ஸ்ரீ சி. முத்துலிங்கம் அவர்களினுள் இருந்து இயக்கியமை அற்புதமே.

இம்மந்திரின் உள் புற அமைப் புக்கள் பக்தர்கள் மனதில் சாந்தியை ஏற்படுத்தி, பக்தியில் மேலோங்கச் செய்து எப்போதும் அவர்களை இறை யுணர்வில் திணைக்கச் செய்யும்.

ஜெய் சாயிராம்

Dr. சி. **சிவகோணேசன்**

மலை நாட்டில் மனித மேம்பாடுகள்

விழிப்புணர்வுக் கண்காட்சி

ஹற்றன் சத்ய சாயி நிலையம் 12-09-1998, 13-09-1998 ஆகிய தினங்களில் ஹற்றன் ஹலன்ஸ் மத்திய மகா வித்தியாலயத்தில் ஒரு கண்காட்சியைநடாத்தியது.சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, நிறுவனம் பற்றிய வரைபடங்கள், காட்டுருக்கள் மாதிரியுருக்கள் போன்றவை வைக்கப் பட்டன. நாளாந்த வாழ்வில் மனித மேம்பாடுகள் கடைப்பிடிக்கும் வழி வகைகள் பற்றியும், தவறும் பட்சத் தில் ஏற்பட்ட, ஏற்படப் போகின்ற விளைவுகள் பற்றியும் விளக்கப் பட்டன. சர்வ மதங்களில் அடிப் படைக் கோட்பாடுகள் பற்றியும் கூறப்பட்டு மதங்களின் ஒற்றுமை வலி யுறுத்தப்பட்டது. பார்வையாளர்கள் பலரும் பாராட்டிச் சென்றனர். மேலும் பகவான் சத்திய சாயி பாபா பற்றிய உலகளாவிய சேவையைப் பலரும் அறிய வாய்ப்பளித்தது. பார்வையாளர்கள் செல்லும் போது கூறிய விமர்சனங்கள் இதை உறுதிப் படுத்தின.

இளைஞர்கள் பலர் பல கேள்வி களைத் தொடுத்துத் தம் சந்தேகங் களைத் தெளிவாக்கிக் கொண்டனர் மேலும் ஒரு நாள் நீடித்தால் மேலும் பலர் பயன்பெறலாம் என்ற வேண்டு கோள் மக்களிடமிருந்து வந்தது. எனவே 14-09-98 திங்கட்கிழமையும் கண்காட்சி நீடிக்கப்பட்டது. நகரத் தில் உள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களும் பயன் பெற்றனர்.

ஹற்றன் தலவாக்கலை சத்திய சாயி நிலையத்தைச் சேர்ந்த பால விகாஸ் குருமாரும், 2ம், 3ம் நாட் களில் மனமுவந்து வந்த ஹலன்ஸ் மத்திய மகா வித்தியாலய ஆண்டு 10, 11, 12 மாணவர்களும் விளக்கம் கொடுத்தனர்.

மத்திய மாகாணத்தில் முதல் முதலாக நடந்த இக்காண்காட்சி ஹற்றன் நகரத்தில் நடந்ததும் ஸ்வாமியின் சங்கற்பமே. ஏனெனில் சர்வ மதத்தினரும் வணங்கும் சிவ னொளிபாத மலை இப்பிரதேசத்தி லேயே உள்ளது. அதுவும் சமாதானத் துக்கான இவ்வாண்டில் நடைபெற்ற இக்கண்காட்சி பார்த்தவர்களின் உள்ளத்தில் ஒளியேற்றி இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

ஜெய் சாயி ராம்.

நயினாதீவு ஸ்ரீ சத்திய சாயி பஜனை நிலையம்

ஆரம்ப விழா

நயினாதீவில் ஸ்ரீ சத்திய சாயி பஜனை நிலையம் 17-12-98 வியாழன், ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்நிலையம் வடபிராந்திய இணைப்புக்குழுவின் கீழ் நேரடியாக இயங்கும்.

இணைப்புக் குழுவின் தலைவர் ஸ்ரீ V. சேனாதிராசாவுடன், பேராசிரியர் நந்தி, ஸ்ரீ S. R. சரவணபவன் ஸ்ரீ K. V. சிவநேசன், ஸ்ரீ K. மகாலிங்கம் விழாவுக்கு சமூகம் தந்தனர்.

இக் குழு காலையில் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலுக்கு சென்று வழிபட்டனர். இக் குழுவினரை தேவஸ்தானத்தினர் வரவேற்று உபசரித்தனர். தேவஸ்தானத்தின் தலைவர் ஸ்ரீ K. A. தியாகராஜாவின் வேண்டுகோளின்படி அம்பாளின் தெற்கு கோபுர முன்றலில் இந் நாள் ஞாபகார்த்தமாக, பேராசிரியர் நந்தி ஒரு விருட்ஷத்தை நாட்டினார்.

மாலையில் ஐந்தாம் வட்டாரத்தில் அமைந்துள்ள பஜனை நிலையத்தில் அதன் தலைவர் ஸ்ரீ V. M. சண்முகநாதன் தலைமையில் பஜனையும், அங்குரார்ப்பண விழாவும் நடைபெற்றன. ஏராளமான பக்தர்கள் பங்குபற்றினர்.

ஸ்ரீ K. A. தியாகராஜா (இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்) இந் நிலையம் எமது மக்களுக்கு எதிர்காலத்தில் ஒரு வழிகாட்டியாக அமையும் எனக் கூறினார்.

நயினாதீவிலில் உள்ள மூன்று பாடசாலைகளிலும் ஸ்ரீ சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி போதிப்பது பற்றிய அவர்களின் வேண்டுகோளை பேராசிரியர் C. சிவஞான சுந்தரம் (நந்தி) ஏற்றுக்கொண்டார்.

இறுதியில் நிலையச் செயலாளர் ஸ்ரீ க. உருத்திரகுமாரன் நன்றி தெரிவித்தார்.

நயினாதீவு ஸ்ரீ சத்தியசாயி பஜன நிலைய அங்குரார்ப்பண விழா ஞாபகமாக இப் பாடலை பிரசுரிக்கிறோம். நயினை நாகபூஷணி அம்மாள் எழுந்தருளி வாசலில் இவ்வாசகம் பதித்து பக்தர் மகிழ்கிறார்கள்.

தனந்தருங்கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந்தரு நெஞ்சில் வஞ்சமிலா
வினந்தரு நல்லன வெல்லாந் தருமன்பரென்ப வர்க்கே
கனந்தரு பூங்குழலாளபிராமி கடைக்கண்களே.

— அபிராமி அந்தாதி —

பகவானின்

73 வது பிறந்ததின விழா - கொழும்பு

விழா மிகவும் பக்தியுடனும், அழகும், நுட்பமும் சேர்ந்த பல அர்ப்பணத்துடன் நடைபெற்றது. மூன்று இடங்களில் பக்தர்கள் கூடி மகிழ்ந்தார்கள். பகவானின் சந்நிதியில் ஆனந்தம் முக்கியம். காலையில் 22, பாண்ஸ் பிளேஸ் மந்திரிலும், வெள்ளவத்தை ருத்திரா மாவத்தையிலுள்ள சிவானந்த நிலையத்திலும் ஓம்காரம் சுப்பிரபாதம் நகர சங்கீர்த்தனம், நாராயண சேவை என்பன நடைபெற்றன. மாலையில் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்திலிருந்து சைவ மங்கையர் கழகத்திற்கு பாண்ட் இசையுடன் ஊர்வலம் வந்து சேர்ந்ததும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

பிரதம அதிதியாக மூத்த அறிஞர் உயர்திரு. A. K. நேசரத்தினம் அவர்கள் கலந்து கொண்டார்கள். கொழும்பு நிலையத் தலைவர் Dr. V. ஜகநாதன் அவர்கள் தலைமை வகித்தார். பாத பூசையும், ஸ்தோத்திரங்களும் பக்தி பூர்வமாக அர்ச்சிக்கப்பட்டன. யோகர் சுவாமிகளின் பாதபூசைப் பாமாலை நேர்த்தியாகப் பாடப்பட்டன.

பாலவிகாஷ் மாணவி செல்வி கோபிகா முரளிதரன் ஆடிய நடனம் பகவானுக்கும், எமக்கும் வணக்கமாக அமைந்தது. இளைஞர் பிரிவு செல்வி ஜசுமதி ஜெகதீஸ்வரன் திறமையான நடன மாணவி. அவரின் நடனங்கள் விழாவிற்குத் தனித்துவம் அளித்தது. பகவானே நேரில் ஊஞ்சலில் இருப்பது போல் அவரின் திருவுருவ அளவின் ஒரு தெய்வப் படம் இருக்கும் போது அவருக்கு முழுநேரமும் முதுகு காட்டி, எம்மை நடனம் மூலம் மகிழவைத்தது அவருக்கு மிகவும் சிரமமாக இருந்திருக்கும். எதிர்காலத்தில் நடன ஏற்பாடு செய்பவர்கள் இதற்கு ஒரு வழி காணவேண்டும். ஒரு நிலையில் சபையை வீழ்ந்து வணங்கும் போது பகவானுக்கு காலை நீட்டுவதையாவது தவிர்க்கலாம்.

இளைஞர் பிரிவின் **சாந்தியைத் தேடி** என்ற இசை, இயல், கணனி வழி காட்சிகள் 21 ம் நூற்றாண்டின் சாயி விழாக்களின் அறிமுகமாக இருந்தன. மிகவும் நுட்பமாக, எடுத்த குறிக்கோளை நிறைவேற்றியதாகவும் இருந்தது. சண்டைக் காட்சிகள் கொஞ்சம் அதிகம். ஊஞ்சல் பாட்டின்போதும், வேறு சந்தர்ப்பங்களிலும் பகவான் தோன்றும் நிழற்படங்கள் திரையில் ஓடிக்கொண்டிருந்தது. சாயி தரிசனத்தை மனம் நிறையத் தந்தது.

கொழும்பு சமித்தி செயலாளர் திரு. R. சுப்பிரமணியமும், மற்றும் சேவையாளர்களும் பகவானின் அன்பிற்கு உரியவராவர்.

— நந்தி —

ஓம் சாயி ராம்





வாழைப்பழத்தில் ஓம் ஸ்ரீ சாயி ராம் :

(விபரம் 2ம் பக்கம்)

எனது சாயிமகள்

யசோதாவுக்கும், விஜயானந்தனுக்கும்

நீயூசிலாந்தில் நடைபெற்ற

திருமண அன்பளிப்பு

இப்பக்கம்.

'' சாயி இல்லம் ''
அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை.

A. S. நடராஜா –